
# திராவிடத்தால் வாழ்கிறோம்

1297

எழுத்து: கோவி.லெனின்

ஓவியம்: கி.சொக்கலிங்கம்




- வாழ்வோம்

## திரைக்கதை வசனம் கலைஞர் மு.கருணாநிதி

குமரன்தாஸ்

74

திரையுலகில் மாபெரும் புரட்சி செய்த கலைஞரின் கைவண்ணத்தில் உருவான படைப்புகளின் பன்முகப் பரிமாணங்களை விளக்கும் தொடர்.

# புதினத்தில் இருந்து திரைக்கு வந்த ‘பொன்னர் சங்கர்!’





படங்கள் உதவி: ஞானம்

2011-ஆம் ஆண்டு, கலைஞரின் திரைக்கதை வசனத்தில் இரண்டு திரைப்படங்கள் திரைக்கு வந்தன. ஒன்று, ‘பொன்னர் சங்கர்’ மற்றது, ‘இளைஞன்’. இவை இரண்டும்தான் கலைஞரின் கடைசித் திரைப்படங்களாகும்.

1947-இல் தொடங்கிய கலைஞரின் 65 ஆண்டுக்காலத் திரைப்பயணம் 2011-ஆம் ஆண்டுடன் நிறைவுபெற்றது.

‘பொன்னர் சங்கர்’ திரைப்படம் கலைஞரின் திரைக்கதை வசனம் மட்டுமின்றி, அவர் எழுதிய நாவலை அடிப்படையாகக் கொண்டு எடுக்கப்பட்ட திரைப் படம். ஆக கலைஞரின் கதை, திரைக்கதை, வசனம் ஆகிய மூன்றிலும் வந்த கடைசித் திரைப்படம் என்ற சிறப்பைப் பெற்ற சரித்திரத் திரைப்படமாக ‘பொன்னர் சங்கர்’ திரைப்படம் விளங்குகிறது.



திரைப்படத்தைத் தயாரித்து இயக்கியவர், நடிகர் தியாகராஜன். இசை இசைஞானி இளையராஜா. இந்தத் திரைப்படத்தில் பிரசாந்த் (இரட்டை வேடம்), நாசர், விஜய குமார், குஷ்பூ, சினேகா, பூஜா சோப்ரா, திவ்யா பரமேஸ்வரன், லட்சுமி ராமகிருஷ்ணன், ராஜ்கிரண், நெப்போலியன், பிரகாஷ்ராஜ், ஜெயராம், பொன்வண்ணன், ரியாஸ்கான், கேப்டன் ராஜ், போஸ் வெங்கட், பொன்னம்பலம் ஆகியோருடன் கௌரவ வேடத்தில் பிரபு, சீதா, சந்தானபாரதி, சுகுமாரி என்று பெரும் எண்ணிக்கையில் பலரும் நடித்துள்ளனர்.

அவர் எழுதிய வரலாற்று நாவலை அடிப்படையாகக் கொண்டு எடுக்கப்பட்ட திரைப்படம் என்றாலும், அந்த நாவலை மேற்கு மாவட்டத்தில் நிலவும் ‘அண்ணன்மார் சாமி’ கதைப்பாடல்களை அடிப்படையாகக் கொண்டு எழுதியதாக திரைப்படத்தின் தொடக்கக் காட்சியில் குறிப்பிடுவார். அந்த வகையில், ‘பொன்னர் சங்கர்’ திரைப்படம் கலைஞரின் ‘மருதநாட்டு இளவரசி’, ‘மந்திரி குமாரி’ போன்று முழுவதும் கலைஞரின் கற்பனையில் உதித்த சரித்திரப் படங்களில் இருந்து மாறுபட்ட திரைப்படமாக இருக்கும். அதனால், இந்தத் திரைப்படத்தில் வரும் பல கதாபாத்திரங்கள், சாதி அடையாளத்தைத் தாங்கியவையாக இருந்தன.



வழக்கம் போலவே இத்திரைப் படத்தின் தொடக்கத்திலும் கலைஞர் (தனது 87-வது வயதில்) திரையில் தோன்றி திரைப்படம் பற்றிப் பேசியிருப்பார்.

“உயிரினும் மேலான அன்பு உடன்பிறப்புகளே, இந்தப் படத்தைக் காண்பதற்கு முன்பு சில வார்த்தைகள். பல ஆண்டுகளுக்கு முன்பு (1947) நான் கோவை சிங்காநல்லூரில் வாழ்ந்தபோது, ‘குன்றுடையார்’ என்றும் ‘அண்ணன்மார் சாமி’ என்றும் ‘பொன்னர் சங்கர்’ என்றும் சில பெயர்களைப் பலர் உச்சரிக்கக் கேட்டிருக்கிறேன்.

### தரவுகள் திரட்டல்

இந்த மூன்று பெயர்களுக்கும் தொடர்புடைய ஓர் உணர்ச்சிகரமானதும், உருக்க மானதுமான வரலாறு பற்றிய செவிவழிச்செய்திகளை, நான் அப்போது கேட்டறிந்தது என் நெஞ்சில் நிழலாடியது. ‘பொன்னழகர் எனும் கள்ளழகர் அம்மானை’, திரு.பழனிச்சாமி அவர்கள் தொகுத்த ‘வரகுண்ணா பெருங்குடி கூட்டம்’, ‘பொன்னர் சங்கர் வரலாற்று நூல்’, புலவர் பிச்சை அவர்களின் ஓலைச்சுவடியை ஒட்டி கவியரசு டி.கே.அழகர் அவர்கள் தொகுத்த ‘அண்ணன்மார் சாமிகள் கதை’ இவற்றை எல்லாம் படிக்கத் தொடங்கினேன். தமிழ் வளர்ச்சி இயக்குநராக இருந்த திரு.சிலம்பொலி செல்லப்பன் அவர்களிடமும் இந்தக் கதை பற்றி கலந்துரையாடினேன்.

நண்பர் சின்னக்குத்தூசி தியாகராஜன் அவர்களை, அந்த வரலாற்று நிகழ்வுகள் நடந்த பகுதிகளுக்கே சென்று பல விவரங்களை அறிந்துவரச் செய்தேன். முன்னாள் அமைச்சர் சுப்புலெட்சுமி ஜெகதீசனும் பல விவரங்களை எனக்குத் தந்தார். பின்னர் நானும் நேரில் சென்று, அந்த இடங்களை எல்லாம் பார்த்து வந்தேன். அதன் பின்னர் ‘பொன்னர் சங்கர்’ கதையை எழுதுவதாக விளம்பரம் செய்தவுடன், 50 ஆயிரம் பிரதிகள் அந்தப் பகுதியிலே மட்டும் விற்பனை அதிகம் கூடியதாக எனக்குத் தெரிவித்தார்கள்.

கடந்த ஆண்டு (2010) இந்தக் கதையைத் திரைப்படமாக எடுக்கப் போவதாக நண்பர் தியாகராஜன் அவர்கள் என்னிடம் வந்து கேட்ட போது, மிகவும் தயக்கத்தோடுதான் ஒப்புக்கொண்டேன். காரணம், பொன்னரும் சங்கரும் அண்ணன்மார் சாமியெனப் போற்றப்பட்டு, அவர்களுக்கென கொங்குச் சீமையிலே இன்றும் பல கோயில்கள் உள்ளன. அந்தக் கோயில்களில் அவர்களின் ‘குலதெய்வங்கள்’ எனப்படும் ‘பெரிய காண்டியம்மன்’, ‘செல்லாண்டியம்மன்’ சிலைகளும் வழிபாட்டுக்குரியவைகளாக அமைக்கப் பட்டுள்ளன.

வல்லமையும் வணங்கத்தக்க நற்பண்பும், வைராக்கிய நெஞ்சும் கொண்ட ‘பொன்னர் சங்கர்’ எனும் உடன்பிறப்புகளின் உடன் பிறப்பாம் தங்கம் எனும் அருக்காணியாம் கற்பரசி, பொன்னர் சங்கரின் பெற்றோர்கள் குன்றுடையார், தாமரை நாச்சியார், பெரிய மலைக் கொழுந்துக் கவுண்டர், சின்ன மலைக் கொழுந்துக் கவுண்டர் காளி மன்னன், செல்லாத்தா கவுண்டர் அவரின் மைந்தன் மாந்தியப்பன், இரண்டு குடும்பங்களுக்கிடையே ஒற்றுமை தோன்றப் பாடுபட்ட மாயவர், தியாகச் செம்மலாக விளங்கிய ராக்கியண்ணன்.

பொன்னர் சங்கர் சகோதரர்களுக்கு உற்றத் தோழனாகவும் விசுவாசமுள்ள துணைவராகவும் திகழ்ந்த வாலிபன் வீரபாகு சாம்புவன் என்ற இந்தக் கதாபாத்திரங்களின் சங்கமம்தான் இந்த ‘பொன்னர் சங்கர்’.

நான் எழுதிய கதையின் உருவம் கெட்டு விடாதபடி, இதனைத் திரைப்படமாக இயக்கிய இயக்குநர் தியாகராஜன் அவர்கள் அனைத்துப் பாராட்டுக்கும் உரியவர். ‘பொன்னர் சங்கர்’ ஆகிய பாத்திரங்களில் நடித்துள்ள அன்புத் தம்பி பிரசாந்த், உயிர்த் துடிப்புடன் நடித்துள்ளார். குன்றுடையாராக புகழ்பெற்ற நடிகர் ஜெயராம் அவர்களும், அவரது துணைவியார் தாமரை நாச்சியாராக குஷ்புவும் போட்டி போட்டுக்கொண்டு நடித்துள்ளார்கள். இந்தப் படத்திற்கான இசையமைப்பாளராக இசைஞானி இளைய ராஜா அவர்களின் இசையைப் பற்றிச் சொல்லவா வேண்டும்? சரித்திரக் கதை என்பதால், செலவைப் பற்றி கொஞ்சமும் நினைத்துப்பார்க்காமல் தயாரிப்பாளரும் வெளியிடுபவரும் வாரி இறைத்திருக்கிறார்கள். கொங்குச்சீமை மக்களின் நெஞ்சங்களில் நிறைந்திட்ட அண்ணன்மார் சாமிகளின் கதையை இதோ உங்கள் முன் படைக்கிறேன்” எனத் திரைப்படத்தின் தோற்றுவாய், அந்தப் புதினத்தை எழுதிய பின்புலத்தை விவரித்திருப்பார்.

> கதைப்பாடலை அடிப்படையாகக் கொண்டு எழுதப்பட்ட கதை என்பதால், சமகால அரசியல் விமர்சனங்கள் வசனமாக, இப்படத்தில் இடம்பெறாததைக் காண்கிறோம்.

கதைப்பாடலை அடிப்படையாகக் கொண்டு எழுதப்பட்ட கதை என்பதால், சமகால அரசியல் விமர்சனங்கள் வசனமாக, இப்படத்தில் இடம்பெறாததைக் காண்கிறோம். இருப்பினும் வாய்ப்புக் கிடைத்த இடங்களில் கலைஞர் தனது முத்திரையைப் பதிக்க மறக்கவில்லை என்பதையும் காண முடிகிறது.

...காட்சி விரியும்

## முடங்கும் தலித் உயர்கல்வி?

திராவிட மாடல் அரசு, சமூக நீதி நோக்கில் கொண்டுவந்த அண்ணல் அம்பேத்கர் அயலக உயர்கல்வித் திட்டத்தினை முடக்கும் நோக்கத்துடன், த.வெ.க.அரசு செயல்பட்டுவருவதாக திராவிட மாணவர் கூட்டமைப்பு, குற்றம் சாட்டியுள்ளது. அவர்கள் வெளியிட்டுள்ள செய்தியில், “தலித் மாணவர்களின் எதிர்காலத்தை அழிக்கும் பார்ப்பன - பா.ஜ.க. - த.வெ.க. கூட்டணி” எனக் குற்றம் சாட்டியுள்ளனர். இந்த திட்டத்தின் கீழ், இந்த ஆண்டில், 362 மாணவர்கள் பயன்பெற்றுள்ளதாகவும், ரூ.131 கோடி நிதி ஒதுக்கீடு செய்து த.வெ.க. அரசு வரலாற்றுச் சாதனை செய்துள்ளதாகவும், அதனைப் பொறுக்காமல், அரசியல் உள்நோக்கத்தோடு தவறான தகவல்கள் பரப்பப்படுவதாகவும் சமூக நீதித்துறை அமைச்சர் வன்னிஅரசு ஆகஸ்ட் 20, 2026 அன்று சட்டமன்றத்தில் பேசியிருக்கிறார். இதனைக் கேட்கும் பொழுது, அமைச்சர் சொல்வது உண்மைதானே, சிறப்பாகச் செயல்படும் அரசாங்கத்தின் மீது, ‘தலித் விரோத த.வெ.க.’ என்று ஏன் பழி சுமத்துகிறார்கள் என்று தோன்றும். ஆனால், மறைக்கப்படும் உண்மை என்னவென்றால், இந்த ஆண்டு தேர்வுசெய்யப்பட்ட 316 மாணவர்கள் வெளிநாடுகள் சென்று படிக்க முடியாது!

2026 ஜூலை மாத இறுதி முதல், இந்தத் திட்டத்தின்கீழ் இந்த ஆண்டு தேர்வுசெய்யப்பட்டு, இலண்டனில் உள்ள தலைசிறந்த பல்கலைக்கழகங்களில் சேர்க்கை பெற்ற 316 மாணவர்கள் தங்களுடைய சேர்க்கையினை உறுதிசெய்ய முடியவில்லை. காரணம், பிரிட்டன் மாநில அரசுகள் வழங்கும் உதவித்தொகையினை ஏற்க மறுத்து, தமிழ்நாடு அரசு வழங்கிய உதவித்தொகை உறுதியளிப்புக் கடிதத்தை நிராகரித்ததே ஆகும். மாணவர் சேர்க்கையினை உறுதிசெய்யும் கடைசி தேதிகள் நெருங்கிவிட்டன. ஆனால், அமெரிக்கா, பிரிட்டன், ஆப்பிரிக்கா நாடுகளில் படிக்கத் தேர்வானவர்கள் எதையும் பெற முடியவில்லை. எனவே, 362 மாணவர்களுக்கு உதவித்தொகை வழங்கிவிட்டோம் என்று கூறுவது வெறும் காகிதத்தில் மட்டுமே இருக்கப்போகிறது.

தேசிய அளவிலான உதவித்தொகைத் திட்டத்தின்கீழ் (NOS) மாணவர்கள் சாதி மற்றும் இந்து மதத்தில் உள்ள ஏற்றத்தாழ்வுகள் குறித்து ஆய்வு செய்யக்கூடாது என்று வழிகாட்டு நெறிமுறைகளை வெளியிட்டது ஒன்றிய பா.ஜ.க. அரசு. இதன் பின்னணியில்தான், தனியார் வங்கிகள் அளிக்கும் உறுதியளிப்புக் கடிதத்தை ஏற்கும் UK VISA AND IMMIGRATION, தமிழ்நாடு அரசு வழங்கும் கடிதத்தை நிராகரிக்கிறது. ஆகவே, இதன் பின்னணியில் பார்ப்பன பா.ஜ.க. மற்றும் ஆர்.எஸ்.எஸ். (RSS) இயங்குகிறது என்பதை உறுதிசெய்யலாம்” என்று குறிப்பிட்டுள்ளனர்.

இந்தப் பிரச்சினை மலேசியாவில் கல்வி பயிலும் ஆய்வு மாணவருக்கும் சமூக நீதித்துறை அமைச்சருக்கும் இடையிலான பிரச்சினை இல்லை. ஆம். முழுப் பூசணிக்காயைச் சோற்றில் மறைத்துக் கொண்டிருக்கிறது த.வெ.க. அரசு.

## ஃப்ளாஷ்பேக்



எஸ்.எஸ்.மாறன்



### மதுரையில் தலைவருக்குக் கோலாகல வரவேற்பு!

2003-ஆம் ஆண்டில், முத்தமிழறிஞர் கலைஞர் ‘தொல்காப்பியப் பூங்கா’ நூல் வெளிவந்தபோது, மதுரை மாநகரிலும் நூல் வெளியீட்டு விழா நடைபெற்றது. அதற்கு வருகை தந்த தலைவர் அவர்களுக்கு, ரயில் நிலையத்தில் கலைநிகழ்ச்சிகளுடன் கோலாகலமாக வரவேற்பு அளித்தேன். மதுரை பாண்டியன் ஓட்டலில் ஓய்வெடுத்த அவர், என்னை வரவழைத்து, அதற்காகப் பாராட்டினார். அவர் கையால் ‘தொல்காப்பியப் பூங்கா’ நூல் பெற்றுக்கொண்டேன்.

- எஸ்.எஸ்.மாறன்,
பகுதிச் செயலாளர், ஆரப்பாளையம் 1-வது பகுதி,
மதுரை மாநகர் மாவட்டம்.

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 82204-51520
மின்னஞ்சல்: murasolipaasarai@gmail.com

## கருவூலம்

### நம்மிடம் வருவார்கள்!

1963-ஆம் ஆண்டு, ‘மன்றம்’ இதழில் எழுதிய கடிதத்தில், கழகம் மக்களிடம் நம்பிக்கை பெற்றுவருவது குறித்து பேரறிஞர் அண்ணா எழுதினார். “இன்று நம்மிடம் வெறுப்புக் காட்டுகிறவர்கள் நம்மிடம் வரவேண்டியவர்கள்; அவர்கள் நம்மோடு வருவார்கள் என்ற நம்பிக்கை நமக்கு இருக்கிறது. ‘ஆனால்...’ என்று இழுக்கிறவர்கள் எல்லாம் இன்றில்லாவிட்டால் நாளை – நாளையில்லாவிட்டால் மற்றொரு நாள் வருவார்கள் என்று நம்புகிறோம். நமது நம்பிக்கைக்குக் காரணம், நாம் கூறிவரும் உண்மை பலரது நெஞ்சத்தைத் தடவ ஆரம்பித்திருக்கிறது என்பதுதான்” என்று குறிப்பிட்டார்.

RNI 1244/57 - Postal Reg.No.MA/43/2024-2026.Licenced to post under without pre payment of postage vide No.TN/WPP-94/SR/2024-2026 Published by Karthikeyan Shanmugasundaram on behalf of Murasoli Trust from No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 and Printed by D.Karthikeyan at Dinakaran Press, No.2/2, Melur Main Road, Uthangudi, Madurai - 625 107. Editor: Karthikeyan Shanmugasundaram, Regn.No.7436, Ph:044 - 45849900